# திவாகரம்.

இரண்டாவது

## மக்கட்பெயர்த்தொகுதி.

### சூத்திரம்.

(க)

துறவோரையர் மாதவர் முநிவ,ரறவோர் நீத்தோரறிஞருயர்ந்தோர்,தாபதர்மெய்யர்தவத்தர்தபோதநர்,முனைவரிருடிகள்படிவர்பண்ணவர், யோகிகள்கடிந்தோர் பெரியோருறுவரொன், ருகியவந்தணரருந்தவர்பேரே.

(உ) சூ.

மாவிரதியருங்காளாமுகரும், பாசுபதருஞ்சைவதவப்பாலோர்.

(ங) சூ.

நாராயணசமயத்தோர்பாகவதரே.

(ச) சூ.

சாவகரருகர்சமணராகு, மாசீவகருமத்தவத்தோரே.

(ரு) சூ.

புத்தர்சாக்கியர்தேரர்பௌத்தர், வைத்த சீவகருமத்தவத்தோரே.

(சா) சூ.

சாரணர்சமணமுநிவராகும்.

(எ) சூ.

தாபதர்சடைமுடியோர்.

### பெயர்ப்பிரிவு.

அருந்தவர்பெயர்

துறவோர்-ஐயர்- மாதவர்-முநிவர்-அறவோர்-நீத்தோர்-அறிஞர்-உயர்ந்தோர்-தாபதர்-மெய்யர்-தவத்தர்- தபோதநர்-முனைவர்- இருடிகள் - படிவர்-பண்ணவர்- யோகிகள்-கடிந்தோர்-பெரியோர்-உறுவர்-அந்தணர். ஆ உக.

சைவதவப்பாலோர்பெயர்.

மாவிரதியர் - காளாமுகர் - பாசுபதர். ஆ ங.

நாராயணசமயத்தோர்பெயர்

பாகவதர். (க)

சமணர்பெயர்.

சாவகர்-அருகர் - ஆசீவகர். ஆ ங.

புத்தர்பெயர்.

சாக்கியர்-தேரர்-பௌத்தர்-சீவகர். ஆ ச.

சமணமுநிவர்பெயர்.

சாரணர். (க)

சடைமுடியோர்பெயர்.

தாபதர். (க)



ஐ

(அ) சூத்திரம்.

ஐயர்வேதியரிருபிறப்பாளர்,மெய்யர்மிக்கவர் மறையோர்பூசுரா, ரந்தணர் நூலோ ரறுதொழிலாளர், செந்தீவளர்ப்போ ருயர்ந்தோ ராய்ந்தோ, ராதிவருணர்வேதபாரகர்,விப்பிரர்தொழுகுலத்தோர் வேள்வியாளர்,முப்புரி நூலோர்முநிவரென்றிவை, தப்பில்பார்ப்பார்தம்பெயராகும்.

(௯) சூ.

கணக்காயர் நூனுரைப்போர்.

(௰) சூ.

கவிஞர்கலைவல்லோர்.

(௰௧) சூ

சான்றோர்மிக்கோர் நல்லவர்மேலவ, ராய்ந்தோ ருயர்ந்தோராரியருலகென,வாய்ந்த வான்றோ ரறிவுடையோரே.

(௰௨) சூ.

கவிஞர்கலைஞர்கற்றவர் மேதையர், சவையே சங்கமுதுவோர் மூத்தோ, ரவையேயறிஞர்புதரோபுலவர்.

(௰௩) சூ.

விபுதர் நிபுணர்குசலர் மிகவல்லோர்.

(௰௪) சூ.

அடிகளத்தனையனாசான்,குரவன்சாமிகோமான்பெருமா, னூவோனீச னிறைவன் றலைவன்,விரவுபதிநாதன் மூத்தோன்பெயரே.

பெயர்ப்பிரிவு.

பார்ப்பார்பெயர்.

ஐயர்-வேதியர்-இருபிறப்பாளர்-மெய்யர்-மிக்கவர்-மறையோர்-பூசுரர்-அந்தணர்-நூலோர்-அறுதொழிலாளர்-செந்தீவளர்ப்போர்-உயர்ந்தோர்-ஆய்ந்தோர்-ஆதிவருணர்-வேதபாரகர்-விப்பிரர்-தொழுகுலத்தோர்-வேள்வியாளர்-முப்புரிநூலோர்-முநிவர். ஆ உ௰.

நூனுரைப்போர்பெயர்.

கணக்காயர். (௧)

கலைவல்லோர்பெயர்.

கவிஞர். (௧)

அறிவுடையோர்பெயர்.

சான்றோர்-மிக்கோர்-நல்லவர்-மேலவர்-ஆய்ந்தோர்-உயர்ந்தோர்-ஆரியர்-உலகு-ஆன்றோர். ஆ ௯.

புலவர்பெயர்.

கவிஞர்-கலைஞர்-கற்றவர்-மேதையர்-சவை-சங்கம்-முதுவோர்-மூத்தோர்-அவை-அறிஞர்-புதர். ஆ ௰௧.

மிகவல்லோர்பெயர்.

விபுதர்-நிபுணர்-குசலர். ஆ ௩.

மூத்தோன்பெயர்.

அடிகள்-அத்தன்-ஐயன்-ஆசான்-குரவன்-சாமி-கோமான்-பெருமான்-ஊவோன்-ஈசன்-இறைவன்-தலைவன்-பதி-நாதன்- ஆ ௰௪.

அ



சூத்திரம்.

(௰௫)

அண்ணலுங் குரிசிலு மேந்தலுந் தோன்றலுஞ், செம்மலும்பெருமையிற்சிறந்தோன் பெயரே.

(௰௬) சூ.

நாதனாயகனதிபன்காந்தன்,பதிகோனீசன்செம்மலிறையே, தலைவன் மன்னவன்பிரானேகொழுந, னாசனாதியெனப்பதினைந்தும், முறைசெயப்பொருட்குமிறைவன்மேற்றே.

(௰௭) சூ.

உலகமென்ப துயர்ந்தோர் மாட்டே.

(௰௮) சூ.

சங்கமுங்குழுவுங்கூட்டமுங் கணமுந், தங்கிய தொகுதியுஞ் சவையுமவையு,மிங்கிவைதிரண்டோர்யாவர்க்குமுரிய.

(௰௯) சூ.

பூவலன் கொற்றவன் பெருமான் காவல, னாயனேந்தல் கோவேகுரிசி, றலைவன் மன்னவன்வேந்தன்முதல்வ,னிருபன் பூபாலனாபதிபார்த்திவ,னிறைவனண்ணலென்பப்பதினெட்டு, மரசன்றன்பெயராகு மென்ப.

(உ௰) சூ.

பரதர்கௌரவர்குருகுலத்தரசர்.

பெயர்ப்பிரிவு.

பெருமையிற்சிறந்தோன் பெயர்.

அண்ணல்-குரிசில்-ஏந்தல்-தோன்றல்-செம்மல். ஆ ௫.

எப்பொருட்குமிறைவன்பெயர்.

நாதன்-நாயகன்-அதிபன்-காந்தன்-பதி-கோன்-ஈசன்-செம்மல்-இறை-தலைவன்-மன்னவன்-பிரான்-கொழுநன்-அரசன்-ஆதி. ஆ ௰௫.

உயர்ந்தோர்பெயர்.

உலகம். (௧)

திரண்டோர்பெயர்

சங்கம்-குழு-கூட்டம்-கணம்-தொகுதி-சவை-அவை. ஆ ௭.

அரசன்பெயர்.

பூவலன்-கொற்றவன்-பெருமான்-காவலன்-ஆயன்-ஏந்தல்-கோ-குரிசில்-தலைவன்-மன்னவன்-வேந்தன்-முதல்வன்-நிருபன்-பூபாலன்-நரபதி-பார்த்திவன்-இறைவன்-அண்ணல். ஆ ௰௮.

குருகுலத்தரசர்பெயர்.

பரதர்-கௌரவர். ஆ உ.

சூத்திரம்.

(௨௧) ———

பூழிய னுதியன் கொங்கன் பொறையன், வானவன்குட்டுவன் வானவரம்பன், வில்லவன் குடநாடன் வஞ்சிவேந்தன், கொல்லிச்சிலம்பன் கோதைகேரளன், போந்தின்கண்ணிக்கோன் பொருநைத் துறைவன், சேரலன் மலயமான் கோச் சேரன்பெயரே.

(௨௨) சூ.

சென்னிவளவன்கிள்ளிசெம்பியன், பொன்னித் துறைவன் புலிக்கொடிப்புரவல, னேரிய னார்த்தார்க்கோனே ரிறையபய, னேரிவெற்பன் கோழிவேந்தன், சூரியன்புனனாடன்கோச் சோழன்பெயரே.

(௨௩) சூ.

செழியன் றமிழ்நாடன் கூடற்கோ தென்னவன், வழுதி மீநவன் பஞ்சவன் மாறன், கௌரியன் வேம்பின்கண்ணிக்கோ கைதவன், பொதியப் பொருப்பன் புனல்வையைத் துறைவன், குமரிச்சேர்ப்பன் கோப்பாண்டியனே.

(௨௪) சூ.

வேள்புலவரசர் சளுக்குவேந்தர்

(௨௫) சூ.

வேளிரும்புரோசருங்குறுநிலவேந்தராட்டரும் குறும்பருமாகுமென்ப.



பெயர்ப்பிரிவு.

கோச்சேரன்பெயர்.

பூழியன் - உதியன் - கொங்கன் - பொறையன் - வானவன் - குட்டுவன் - வானவரம்பன் - வில்லவன் - குடநாடன் - வஞ்சிவேந்தன் - கொல்லிச்சிலம்பன் - கோதை - கேரளன் - போந்தின்கண்ணிக்கோன் - பொருநைத் துறைவன் - சேரலன் - மலயமான். ஆ. ௰௭.

கோச்சோழன்பெயர்.

சென்னி - வளவன் - கிள்ளி - செம்பியன் - பொன்னித்துறைவன் - புலிக்கொடிப்புரவலன் - நேரியன் - ஆர்த்தார்க்கோன் - நேரிறை - அபயன் - நேரிவெற்பன் - கோழிவேந்தன் - சூரியன் - புனனாடன். ஆ. ௰௪.

கோப்பாண்டியன்பெயர்.

செழியன் - தமிழ்நாடன் - கூடற்கோ - தென்னவன் - வழுதி - மீநவன் - பஞ்சவன் - மாறன் - கௌரியன் - வேம்பின்கண்ணிக்கோ - கைதவன் - பொதியப் பொருப்பன் - வையைத்துறைவன் - குமரிச்சேர்ப்பன். ஆ. ௰௪.

சளுக்குவேந்தர்பெயர்.

வேள்புலவரசர். (௧)

குறுநிலவேந்தர்பெயர்.

வேளிர் - புரோசர் - ஆட்டர் - குறும்பர். ஆ. ௪.





சூத்திரம்.

(௨௬) ———

முதுவர்குரவர்மூத்தோர்முன்னோ, ருழையோர்சூழ்வோர் நூல் வல்லோரே, யமைச்சர் தேர்ச்சித் துணைவரொன்றுங், கிசைத்தமந்திரிக் கிழவர்க்கெய்தும்.

(௨௭) சூ.

இனப்பெயர் தன்னட்பாளர்க்கெய்தும்.

(௨௮) சூ.

எனுதிகாவிதியாமாத்தியரெனும்பெய, ரானுமந்திரித்தந்திரிக்கெய்தும்.

(௨௯) சூ.

வள்ளுவன் சாக்கையெனும் பெயர்மன்னர்க்குள்படுகருமத்தலைவர்க்கொன்றும்.

(௩௰) சூ.

பொரும்போர்த்தலைவர் பொருநரெனப்படுப.

(௩௧) சூ.

பரியாளமென்பது பரிவாரமாகும்.

(௩௨) சூ.

இப்பர்பரதர் வைச்சியர் கவிப்ப, ரெட்டியரிளங்கோக்களேர்த்தொழிலர் பசுக்காவல, ரொப்பினாய்கர் வினைஞர்வணிகரொன், றத்தகுசிரேட்டிகள் செட்டிகள்பெயரே.



பெயர்ப்பிரிவு.

மந்திரிக்கிழவர்பெயர்.

முதுவர் - குரவர் - மூத்தோர் - முன்னோர் - உழையோர் - சூழ்வோர் - நூல்வல்லோர் - அமைச்சர் - தேர்ச்சித்துணைவர். ஆ. ௯.

நட்பாளர்பெயர்.

இனம். (௧)

மந்திரித்தந்திரிக்குப்பெயர்.

எனுதி - காவிதி - ஆமாத்தியர் ஆ. ௩.

கருமத்தலைவர்பெயர்.

வள்ளுவன் - சாக்கை. ஆ. ௨.

போர்த்தலைவர்பெயர்.

பொருநர். (௧)

பரிவாரத்தின்பெயர்.

பரியாளம். (௧)

செட்டிகள்பெயர்

இப்பர் - பரதர் - வைச்சியர் - கவிப்பர் - எட்டியர் - இளங்கோக்கள் - ஏர்த்தொழிலர் - பசுக்காவலர் - நாய்கர் - வினைஞர் - வணிகர் - சிரேட்டிகள். ஆ. ௰௨.

சூத்திரம்.

(௫௩) ———

வினைஞர்சூத்திரர்பின்னவர்சதுர்த்தர், வள்ளையர் வேளாளர்மண்மகள்புதல்வர்,வார்த்தைத்தொழிலோர் வன்களமருழவர், ஏர்த்தவேரின் வாழ்நர் காராளர்.

(௫௪) சூ.

மிலேச்சராரியர்.

(௫௫) சூ.

யவநர்சோனகர்.

(௫௬) சூ.

ஆயுள் வேதியர் மாமருத்துநூலோர்,மாமாத்திராபேடகர்மருத்துவர்.

(௫௭) சூ.

தந்துவாயர்காருகர்கைக்கோளர்.

(௫௮) சூ.

கும்பகாரர் குலாலர் வேட்கோவரொன், திங்கிவை குயவர் மட்பகைஞரென்ப.

(௫௯) சூ.

உமணாளவருப்பமைப்போர்.

(௬௰) சூ.

ஓவியர்சித்திரகாரராகும்.

(௬௧) சூ.

கம்மியர்யவநர் கொல்லர்தபதிய,ாக்கசாலையர்சிற்பியரதனொடு,வித்தகர்வித்தியர்புனைவரறிவரொன்,றத்தகுகண்ணாளர்பெயரொனவறைவர்.

பெயர்ப்பிரிவு.

காராளர்பெயர். (௰௧)

வினைஞர்-சூத்திரர் - பின்னவர்-சதுர்த்தர் - வள்ளையர்-வேளாளர்-மண்மகள்புதல்வர்-வார்த்தைத்தொழிலோர் - களமர்-உழவர்-ஏரின்வாழ்நர்.

ஆ-௰௧.

மிலேச்சர்பெயர். (௰௨)

ஆரியர். (௧)

சோனகர்பெயர்.

யவநர். (௧)

மருத்துவர்பெயர்.

ஆயுள்வேதியர்- மருத்துநூலோர்- மாமாத்திரர்-பிடகர்.

ஆ-௪.

கைக்கோளர்பெயர்.

தந்துவாயர்- காருகர்.

ஆ-௨.

குயவர்பெயர்.

கும்பகாரர்-குலாலர்-வேட்கோவர்-மட்பகைஞர்.

ஆ-௪.

உப்பமைப்போர்பெயர்.

உமணர்-அளவர். ஆ-௨.

சித்திரகாரர்பெயர். (௰௩)

ஓவியர். (௧)

கண்ணாளர்பெயர்.

கம்மியர்-யவநர்-கொல்லர் - தபதியர் - அக்கசாலையர்-சிற்பியர்-வித்தகர்-வித்தியர்-புனைவர்-அறிவர். ஆ-௰.







சூத்திரம்.

(௬௨) ———

தபதியர்மரவினையர்தச்சராகும்.

(௬௩) சூ.

கன்னுவர்கஞ்சகாரர்கன்னார்.

(௬௪) சூ.

செங்கொல்லர்தட்டார்பொன்வினைசெய்வோர்.

(௬௫) சூ.

ஏகாலியர்தூசரீரங்கோலியர்காழியர் வண்ணாரகக்கருதுவர்.

(௬௬) சூ.

கர்ரோடர்துறைகாரர்.

(௬௭) சூ.

சூநருன்விலைஞர்.

(௬௮) சூ.

பறம்பர்தோல்வினைஞர்.

(௬௯) சூ.

பெருமஞ்சிகரோமயிர்வினைஞர்நாவிதர்.

(௭௰) சூ.

சக்கிரிநந்திகள்செக்காராகும்.

(௭௧) சூ.

பழையர்துவசர் படுவர்கள் விலைஞர்.

(௭௨) சூ.

குணுங்கர்வங்கர் கவுண்டர்கநகத, ரிழிஞர் கொலைஞர் புலைஞரொன்றுங், கிசையும் பெயர் சண்டாளர்க்கெய்தும்.

பெயர்ப்பிரிவு.

தச்சர்பெயர்

தபதியர்-மரவினையர். ஆ-௨.

கன்னார்பெயர்.

கன்னுவர்-கஞ்சகாரர்.

ஆ-௨.

தட்டார்பெயர்

செங்கொல்லர் - பொன்வினைசெய்வோர். ஆ-௨.

வண்ணார்பெயர்.

ஏகாலியர் - தூசர் - ஈரங்கோலியர்-காழியர். ஆ-௪.

(௰௪)

உறைகாரர்பெயர்.

கர்ரோடர். (௧)

ஊன்விலைஞர்பெயர்.

சூநர். (௧)

தோல்வினைஞர்பெயர்.

பறம்பர் (௧)

நாவிதர்பெயர்

பெருமஞ்சிகர் - மயிர்வினைஞர். ஆ-௨.

செக்கார்பெயர்

சக்கிரி-நந்திகள். ஆ-௨.

கள்விலைஞர்பெயர்

பழையர்- துவசர்- படுவர்.

ஆ-௩.

சண்டாளர்பெயர்.

குணுங்கர்-வங்கர் - கவுண்டர்- கநகதர் - இழிஞர் - கொலைஞர்-புலைஞர். ஆ-௭.

சூத்திரம்.

(௫௩)

சென்னியர்வைரியர்சூதர்மாகத, ரின்னிசைகாரர் மதங்கர் பாணர்.

(௫௪) சூ.

பண்டரு மோவரும் பாடற் றேம்மக்கள்.

(௫௫) சூ.

வாயிலோர் தமிழ்க்கூத்தர்.

(௫௬) சூ.

வேழம்பர்கழைக்கூத்தர்.

(௫௭) சூ.

இயவர் தோற்கருவி யிசைக் குமாக்கள்.

(௫௮) சூ.

குயிலுவர்நரப்புக்கருவிகொளற்குரியோர்.

(௫௯) சூ.

தொழுவர்கம்மியர்தொழில் செய்வோரே.

(௬௰) சூ.

அதிதியர் வம்பலர் புதியோராகும்.

(௬௧) சூ.

நீகான்மரக்கலன் மீகாமனாகும்.

(௬௨) சூ.

நொதுமலர்வம்பலரயலோராகும்.

பெயர்ப்பிரிவு.

பாணர்பெயர்.

சென்னியர்-வைரியர்-சூதர்-மாகதர்-இன்னிசைகாரர்-மதங்கர். ஆ. ௬.

பாடற்றேம்மக்கள்பெயர்.

பண்டர்-ஒவர். ஆ. ௨.

தமிழ்க்கூத்தர்பெயர்.

வாயிலோர். (௧)

கழைக்கூத்தர்பெயர்.

வேழம்பர். (௧)

தோற்கருவியிசைப்போர்பெயர்.

இயவர். (௧)

நரப்புக்கருவிகொளற்குரியோர்பெயர்.

குயிலுவர். (௧)

தொழில்செய்வோர்பெயர்.

தொழுவர்-கம்மியர். ஆ. ௨.

புதியோர்பெயர்.

அதிதியர்-வம்பலர். ஆ. ௨.

மீகாமன்பெயர்.

நீகான்-மரக்கலன். ஆ. ௨.

அயலோர்பெயர்.

நொதுமலர்-வம்பலர். ஆ. ௨.





சூத்திரம்.

(௬௩)

பதிகரென்பவழிச்செல்வோரே.

(௬௪) சூ.

ஆளுந் தொழும்பு மடிமையாகும்.

(௬௫) சூ.

வாலுவர்கூவியர் மடையராகும்.

(௬௬) சூ.

சிலதர்சிலதியர்சேடர்சேடியர், பரிசநமுழையோ ரேவல் செயற்பாலோர்.

(௬௭) சூ.

வினையுரைப்பாரும்வழியுரைப்பாரு,மனையபண் புரைப்பாருந்தூதர்.

(௬௮) சூ.

சாரண ருசாவே யொற்றெனச்சாற்றுவர்.

(௬௯) சூ.

வேலன் முருகன் வெறியாட்டாளன், தேவராளன் படிமத்தோனே.

(௭௰) சூ.

செவிடர்வதிரர்.

(௭௧) சூ.

மூடவன்பங்கு.

(௭௨) சூ.

பேடர்பேடியர்பெண்டகர் பெண்டரென்,றாகிய நான்குமலிப்பெயராகும்.

பெயர்ப்பிரிவு.

வழிச்செல்வோர்பெயர்.

பதிகர். (௧)

அடிமையின்பெயர்.

ஆள்-தொழும்பு. ஆ. ௨.

மடையர்பெயர்.

வாலுவர்-கூவியர். ஆ. ௨.

ஏவல்செய்வோர்பெயர்.

சிலதர் - சிலதியர் - சேடர் - சேடியர் - பரிசநம் - உழையோர். ஆ. ௬.

தூதர்பெயர்.

வினையுரைப்பார் - வழியுரைப்பார் - பண்புரைப்பார். ஆ. ௩.

ஒற்றர்பெயர்.

சாரணர்-உசா. ஆ. ௨.

வெறியாட்டாளன்பெயர்.

வேலன்-முருகன் - தேவராளன்-படிமத்தோன். ஆ. ௪.

செவிடர்பெயர்.

வதிரர். (௧)

மூடவன்பெயர்.

பங்கு. (௧)

அலியின்பெயர்.

பேடர்-பேடியர்- பெண்டகர்-பெண்டர். ஆ. ௪.

சூத்திரம்.

(௭௩)
மூகையுமூங்கையுமூமையா
கும்.

(௭௪) சூ.
ஆதரந்தர்ந்தகர்குருடர்.

(௭௫) சூ.
கூனேகோணலாமெனக்கூ
றுவர்.

(௭௬) சூ.
சிந்தேகுஞ்சங்குறளேவாம
நம்.

(௭௭) சூ.
கயவர் கநிட்டர்பூரியர்நீசர்,
சுமடர்பேதையர்தீயோர்மூட
ர்,புல்லார்தேரார்கலர்பொறிய
ற்றார்,சீத்தையர்சிறுமையர்கை
யர், கண்டகர் மூர்க்கர் தீம்பர்
மூகர் முசுண்டரொன், றுக்கிய
பெயர்கீழ்மக்கட்காகும்.

(௭௮) சூ.
முழுமகன்சிதடனிழுதை மூ
டன்,மண்ணைமடன்பேதைகுத
லையஞ்ஞை, யஞரோ யாதனே
ழையறிவிலான்.

(௭௯) சூ.
ஆதுலர்வறியோரில்லோரெ
ளிய,ருறுகணாளர் நல்கூர்ந்தோ
ர்தரித்திரர்.

(௮௰) சூ.
ஆர்த்தர் துயருறுவோர்.

(௮௧) சூ.
கரவடர்சோரர்கள்வர்பட்டி
கள்தேனர்புரையோர்திருடரா
கும்.

பெயர்ப்பிரிவு.

ஊமையின்பெயர்.
மூகை-மூங்கை. ஆ௨

குருடர்பெயர்.
ஆதர்-அந்தர்-அந்தகர். ஆ௩.

கூனின்பெயர்.
கோணல். (க)

குறளின்பெயர்.
சிந்து-குஞ்சம்- வாமநம். ஆ௩.

கீழ்மக்கள்பெயர்.
கயவர்-கநிட்டர்-பூரியர்- நீ
சர்-சுமடர்-பேதையர்-தீயோ
ர்-மூடர்-புல்லார்-தேரார்-க
லர்-பொறியற்றார்-சீத்தையர்-
சிறுமையர்-கையர்-கண்டகர்-
மூர்க்கர்-தீம்பர்-மூகர்-முசு
ண்டர். ஆ௨௰.

அறிவிலான்பெயர்.
முழுமகன் - சிதடன் - இழு
தை - மூடன் - மண்ணை - மடன்-
பேதை-குதலை-அஞ்ஞை-அஞ
ர்-ஆதன்-ஏழை. ஆ௰௨.

தரித்திரர்பெயர்.
ஆதுலர் - வறியோர் - இல்
லோர்-எளியர் - உறுகணாளர்-
நல்கூர்ந்தோர். ஆ௭.

துயருறுவோர்பெயர்.
ஆர்த்தர். (க)

திருடர்பெயர்.
கரவடர்-சோரர்-கள்வர்-பட்
டிகள்- தேனர் - புரையோர்-
ஆ௭.]





சூத்திரம்.

(௮௨)
கிழவருரியோர்.

(௮௩) சூ.
முதுவர்முதிணர்ந்தோர்.

(௮௪) சூ.
வயவன்மீளிவல்லாளனே

(௮௫) சூ.
விறலோன்விடலைதிறலோன்
பெயரே.

(௮௬) சூ.
நகர்ப்பதிவாழ்நர்சதுரர்நா
கரீகர்.

(௮௭) சூ.
விடரோ காமுகர் மிகுபோ
கம்விழைநர்,படிற்றொழுக்க
ர்காமத் துப்பாலோர் தூர்த்தர்.

(௮௮) சூ.
குமரன்காளைமழவன் சேட
ன், முருகன்கட்டிளைமையோ
னென்மொழிப.

(௮௯) சூ.
வியவனேவுவான்.

(௯௰) சூ.
இயவுள்புகழாளன்.

(௯௧) சூ.
கள்வனென் கிளவி கரியோ
னென்ப.

(௯௨) சூ.
கொண்டோற்பிழைத் துப்
பெறுட்புதல்வன்குண்டகன்

(௯௩) சூ.
கோளில்கைம்மையிற்பெற்ற
ம்புதல்வன்கோளகன். க

பெயர்ப்பிரிவு.

உரியோர்பெயர்.
கிழவர். (க)

முதிர்ந்தோர்பெயர்.
முதுவர். (க)

வல்லாளன்பெயர்.
வயவன்-மீளி. ஆ௨.

திறலோன்பெயர்.
விறலோன்-விடலை. ஆ௨.

நகர்ப்பதிவாழ்நர்பெயர்.
சதுரர்-நாகரீகர். ஆ௨.

தூர்த்தர்பெயர்.
விடர்- காமுகர்-மிகுபோக
ம்விழைநர் - படிற்றொழுக்க
ர்-காமத்துப்பாலோர். ஆ௫.

கட்டிளமையோன்பெயர்.
குமரன்-காளை-மழவன்-சே
டன்-முருகன். ஆ௫.

ஏவுவான்பெயர்.
வியவன். (க)

புகழாளன்பெயர்.
இயவுள். (க)

கரியோன்பெயர்.
கள்வன். (க)

கொண்டோற்பிழைத் துப்
பெறும்புதல்வன்பெயர்.
குண்டகன். (க)

கைம்மையிற்பெறும்புதல்வன்
பெயர்.
கோளகன். (க)

சூத்திரம்.

(௬௪)

கந்தியிற்பெறும்புதல்வன் கானீதனுகும்.

(௬௫) சூ.

குலீநரென்பகுலமுள்ளோ [ரோ.

(௬௬) சூ.

வலுவைவல்லுநன்வல்லோன் பெயரே.

(௬௭) சூ.

வல்லார்மாட்டாதார் வல்லுநரல்லோர்.

(௬௮) சூ.

உல்லியர்கூவநூலுரையுணர்வோர்.

(௬௯) சூ.

நாவலர்கற்றோர்பாவலர்கவிகள்.

(௭௰) சூ.

மங்கலப்பாடகரொட்டர்கடிகைமாக்கள்.

(௭௧) சூ.

கோடியர் பொருநர்நாடகியர்நிருத்தர், கண்ணுளர் வயிரியர்வினைஞர்நடரொன், றெண்ணியபேயர்கள் கூத்தர்க் கெய்து [ம்.

(௭௨) சூ.

மாகதர்வந்தியர்சூதர் வேதாளியர், பூகதர் பப்புவர்புகழ்வோர்பெயரே.

பெயர்ப்பிரிவு.

கந்நியிற்பெறும்புதல்வன்பெ [யர்.

கானீநன். (க)

குலமுள்ளோர்பெயர்.

குலீநர். (க)

வல்லோன்பெயர்.

வல்லை-வல்லுநன். ஆ. ௨.

வல்லுநரல்லோர்பெயர்.

வல்லார்-மாட்டாதார். ஆ. ௨.

கூவநூலோர்பெயர்.

உல்லியர். (க)

கவிகள்பெயர்.

நாவலர்-கற்றோர்-பாவலர். ஆ. ௩.

கடிகைமாக்கள்பெயர்.

மங்கலப்பாடகர்-ஏட்டர். ஆ. ௨.

கூத்தர்பெயர்.

கோடியர்-பொருநர்-நாடகியர்-நிருத்தர்-கண்ணுளர்-வயிரியர்-வினைஞர்-நடர். ஆ. ௮.

புகழ்வோர்பெயர்.

மாகதர்-வந்தியர்-சூதர்-வேதாளியர்-பூகதர்-பப்புவர். ஆ. ௬.





சூத்திரம்.

(௭௩)

சூதருவ்வலவருந்தேர்த்தொழிற்பாகர்.

(௭௪) சூ.

ஆதோரணர்வாதுவர்யானைப்பாகர்.

(௭௫) சூ.

வாதுவர்பரிமாவடிப் போருமாகும்.

(௭௬) சூ.

இரவலரிரவோர் பரிசிலாளர், யாசகரென்றிவை யிரப்போர்பெயரே.

(௭௭) சூ.

வண்மையாதுகொடுப்போர்வள்ளியோராகும்.

(௭௮) சூ.

மாநவர்வீரர்மறவர் பொருநர்சானகலியர்மண்டர் மள்ள, ரேனைவாளுழவரெருளர் கூளியர், தானைத்தறுகண்ணாளர் தம்பெயரே.

(௭௯) சூ.

தரியலர்தெவ்வர்மேவலர்செறுநர்,கருதலர்சேரலரிரிஞரொன்னு, ரொல்லாரரிகளள்ளாரமரா,ரொட்டார்புல்லார் நேரார்நிகரா, ரொட்டலர் நேரலரிகலோரெதிர்ந்தோர், விட்டவர்மாற்றலர் முனைந்தோரொன்றுங்,கொட்டியபிறவும்பகைஞரென்றுரைப்பர்.

பெயர்ப்பிரிவு.

தேர்ப்பாகர்பெயர்.

சூதர்-வலவர். ஆ. ௨.

யானைப்பாகர்பெயர்.

ஆதோரணர்-வாதுவர். ஆ. ௨.

குதிரைவடிப்போர்பெயர்.

வாதுவர். (க)

இரப்போர்பெயர்.

இரவலர்-இரவோர்-பரிசிலாளர்-யாசகர். ஆ. ௪.

வண்மையாதுகொடுப்போர்பெய [ர்.

வள்ளியோர். (க)

தானைத்தலைவர்பெயர்.

மாநவர்-வீரர்-மறவர்-பொருநர்-கலியர்-மண்டர்-மள்ளர்-வாளுழவர்-எருளர்-கூளியர். ஆ. ௰.

பகைஞர்பெயர்.

தரியலர்-தெவ்வர்-மேவலர்-செறுநர்-கருதலர்-சேரலர்-இரிஞர்-ஒன்னார்-ஒல்லார்-அரிகள்-நள்ளார்-அமரார்-ஒட்டார்-புல்லார்-நேரார்-நிகரார்-ஒட்டலர்-நேரலர்-இகலோர்-எதிர்ந்தோர்-விட்டவர்-மாற்றலர்-முனைந்தோர். ஆ. ௨௩.

சூத்திரம்.

(௱௰) ———

ஒல்லுநர் துன்னுநரொட்டுந ரொன்றுநர்,நள்ளுநர்தொடர்ந்தோர்மேவினர்நாமம்.

(௱௰௧) சூ.

ஒக்கல்சுற்றமுறவு கிளைகே;ண்ட்புமேவினர் சார்ந்த் வருற்ரு ர்,பந்தங்கூளி கடும்பு குடும்ப, நந்தமர் சிறந்தோர்நட்டோர் பரிசந,மந்தமிழுறவென்றறைந்தனர்புலவர்.

(௱௰௨) சூ.

ஆடவர் மைந்தர் காளை குமர்; ராடூஉ மாந்தர்மகன் புமாந் மணாளன்,கூடியவாண் பெயராகக்கூறுவர்.

(௱௰௩) சூ.

பேதையங்கனைவநிதையிளம்பிடி,மாதுமடவாண் மகடூஉ மங்கை,மடந்தைகாரிகை மாநிதிவஞ்சநி; மாயோ ளாட்டிபாவைதெரிவை,தையலரிவை பெதும்பைபிணாமக்,ணே புநண்ணிடைநாரியென்றுங், கிருபதுமிரண்டும் பெண்பாற் கெய்தும்.

(௱௰௪) சூ.

பேதைபெதும்பை மங்கை மடந்தை,யரிவைதெரிவைபேரிளம் பெண்ணென, வெழுவகைப்பருவப் பெண்பாற் கெய்தும்.

பெயர்ப்பிரிவு.

மேவினர்பெயர்.

ஒல்லுநர் - துன்னுநர் - ஒட்டுநர் - ஒன்றுநர் - நள்ளுநர் - தொடர்ந்தோர். ஆ. ௬.

உறவின்பெயர்.

ஒக்கல் - சுற்றம் - உறவு - கிளை - கேள் - நட்பு - மேவினர் - சார்ந்தவர் - உற்றார் - பந்தம் - கூளி - கடும்பு - குடும்பம் - தமர் - சிறந்தோர் - நட்டோர் - பரிசநம். ஆ. ௰௭.

ஆண்பாலின்பெயர்.

ஆடவர் - மைந்தர் - காளை - குமரர் - ஆடூஉ - மாந்தர் - மகன் - புமாந் - மணாளன். ஆ. ௯.

பெண்பாலின்பெயர்.

பேதை - அங்கனை - வநிதை - இளம்பிடி - மாது - மடவாள் - மகடூஉ - மங்கை - மடந்தை - காரிகை - மாநிதி - வஞ்சநி - மாயோள் - ஆட்டி - பாவை - தெரிவை - தையல் - அரிவை - பெதும்பை - பிணா - மகள் - நாரி. ஆ. ௨௨.

எழுவகைப்பருவப்பெண்பாலாவன.

பேதை - பெதும்பை - மங்கை - மடந்தை - அரிவை - தெரிவை - பேரிளம்பெண்.

கோ



சூத்திரம்.

(௱௰௫) ———

கோமாள் பெருமாட்டி குராத்தி யையை, யாசாள் சாமியிறைமையாட்டி, யடிகளத்தை தலைவிபெயரே.

(௱௰௬) சூ.

மைம்மையுங்கௌந்தியுமருந்தவப்பெண்பெயர்.

(௱௰௭) சூ.

கைம்மையுங்கைநியுங்கலன் கழிமகளிர்.

(௱௰௮) சூ.

மைம்மைவத்தி மலடிப்பெயரே.

(௱௰௯) சூ.

பரத்தையுங் கணிகையுஞ் சூளையும்பொதுப்பெண்.

(௱௨௰) சூ.

நடியேகூத்தி நாடகக்கணிகை.

(௱௨௰௧) சூ.

பாடிநி விறலிபாட்டி மதங்கி, பாடன் மகடூஉப் பாண்மகளாகும்.

(௱௨௰௨) சூ.

அணியிற்பண்பி லுவமையொடடுத்தன,வரைவிலாடூஉ மகடூஉப்பலபெயர்,வரலாற்று முறைமையின்வந்தனகொளலே.

(௱௨௰௩) சூ.

எமியுடனிகழ்வான்.

த

பெயர்ப்பிரிவு.

தலைவிபெயர்.

கோமாள் - பெருமாட்டி - குராத்தி - ஐயை - ஆசாள் - சாமி - இறைமையாட்டி - அடிகள் - அத்தை. ஆ. ௯.

அருந்தவப்பெண்பெயர்.

மைம்மை - கௌந்தி. ஆ. ௨.

கலன்கழிமகளிர்பெயர்.

கைம்மை - கைநி. ஆ. ௨.

மலடிப்பெயர்.

மைம்மை - வத்தி. ஆ. ௨.

பொதுப்பெண்பெயர்.

பரத்தை - கணிகை - சூளை. ஆ. ௩.

நாடகக்கணிகைபெயர்

நடி - கூத்தி. ஆ. ௨.

பாண்மகள்பெயர்.

பாடிநி - விறலி - பாட்டி - மதங்கி - பாடன்மகடூஉ. ஆ. ௫.

அணியும்பண்புமுவமையுமடுத்துத்தொன்றுதொட்டு வருமுறைமையானுட்சிப்பட்டுவந்தனவாகிய ஆடூஉமகடூஉப்பெயர்களையுங்கொள்க.

உடனிகழ்வான்பெயர்.

எமி. (க)

த

சூத்திரம்.

(௱௨௪) ———

தமிதனியாகும்.

(௱௨௫) சூ.

குறவர்கானவர் குன்றவர்பு
னவ,ரிறவுளர்குறிஞ்சி நிலமக்க
ட்பெயரே.

(௱௨௬) சூ.

கொடிச்சியர் குறத்தியர்கு
றிஞ்சிநிலப்பெண்பெயர்.

(௱௨௭) சூ.

கானகநாடன் பொருப்பன
பொருந, னைமலையன்வெற்ப
ன்சிலம்பன்,சிறந்த நண்பனெ
ன்றிவைமுதலாக், குறிஞ்சிக் கி
றைவன்பெயரெனக்கூறுவர்.

(௱௨௮) சூ.

மறவரெயினர்பாலைநிலமக்க
[ள்.

(௱௨௯) சூ.

மறத்தியரெயிற்றியர் வன்க
ட்பிணாக்க,ளென்றுமந்நிலத்த
ரிவையர்பெயரே.

(௱௩௰) சூ.

மீளியுங்காளையும் விடலையு
மென்றிவை, பாலைக் கிறைவன்
பெயரெனக்கூறுவர்.

(௱௩௧) சூ.

கொலைஞரெயினர்வநசரர்ச
வரர்,சிலவர் கானவர் மாகுலவர்
கிராதர்,புளிநர்மறவர்வேடரெ
ன்றுங், கணையவர்பொதுப்பெ
யராதல்வேண்டும்.

பெயர்ப்பிரிவு.

தனியின்பெயர்

தமி. (௧)

குறிஞ்சிநிலமக்கள்பெயர்.

குறவர்-கானவர்-குன்றவர்-புனவர்-இறவுளர். ஆ௫.

குறிஞ்சிநிலப்பெண்கள்பெயர்

கொடிச்சியர்-குறத்தியர். ஆ௨.

குறிஞ்சிக்கிறைவன்பெயர்.

கானகநாடன்-பொருப்பன்-பொருநன்-மலையன்-வெற்பன்-சிலம்பன்-நண்பன்- ஆ௭.
இவைமுதலாயின.

பாலைநிலமக்கள்பெயர்

மறவர்-எயினர். ஆ௨.

பாலைநிலப்பெண்கள்பெயர்.

மறத்தியர்-எயிற்றியர்-வன்கட்பிணாக்கள். ஆ௩.

பாலைக்கிறைவன்பெயர்.

மீளி-காளை-விடலை. ஆ௩.

பாலைநிலமக்கட்கும்நிலத்தலைவர்க்கும்பொதுப்பெயர்.

கொலைஞர்-எயினர்-வநசரர்-சவரர்-சிலவர்-கானவர்-மாகுலவர்-கிராதர்-புளிநர்-மறவர். ஆ௰.





சூத்திரம்.

(௱௩௨) ———

முல்லையாளர் கோவல ரிடை
யர், சொல்லியவண்டர்பொது
வரான்வல்லோர், குடவர்பாலர்
தொறுவர் கோவிந்த, ரண்டர்
கோபாலராயரமுத, ரொன்றி
யமுல்லைநிலத்தவர்பெயரே.

(௱௩௩) சூ.

ஆய்ச்சியர் தொறுத்தியர்
பொதுவியர்குடத்தியர்,வாய்
த்தவிடைச்சியர் முல்லைநிலமக
ளிர்.

(௱௩௪) சூ.

அண்ணறோன்றல்குறும்பொ
றைநாடன், கானகநாடன் முல்
லைத்தலைமகன்.

(௱௩௫) சூ.

பரதவர் நுளையர்கடலர் வலை
யர்,சலவர் திமிலர் நெய்தனில
மாக்கள்.

(௱௩௬) சூ.

நுளைச்சியர்பரத்தியர்நுளை
கடற்பிணாக்கள்.

(௱௩௭) சூ.

அளவர்நிலத் திப்பமைப்
பேரே.

(௱௩௮) சூ.

கொண்கன்றுறைவன் மெல்
லன்புலம்பன், றண்கடற்சேர்ப்
பனெய்தற்றலைமகன்.

(௱௩௯) சூ.

களமர்தொழுவர்மள்ளர்

பெயர்ப்பிரிவு.

முல்லைநிலமக்கள்பெயர்.

முல்லையாளர்-கோவலர்-இடையர்-வண்டர்-பொதுவர்-ஆன்வல்லோர்-குடவர்-பாலர்-தொறுவர்-கோவிந்தர்-அண்டர்-கோபாலர்-ஆயர்-அமுதர். ஆ௰௪.

முல்லைநிலமகளிர்பெயர்.

ஆய்ச்சியர்-தொறுத்தியர்-பொதுவியர்-குடத்தியர்-இடைச்சியர். ஆ௫.

முல்லைநிலத்தலைமகன்பெயர்.

அண்ணல்-தோன்றல்-குறும்பொறைநாடன்-கானகநாடன். ஆ௪.

நெய்தனிலமாக்கள்பெயர்.

பரதவர்-நுளையர்-கடலர்-வலையர்-சலவர்-திமிலர். ஆ௬.

நெய்தனிலப்பெண்பெயர்

நுளைச்சியர்-பரத்தியர்-கடற்பிணாக்கள். ஆ௩.

நெய்தனிலத்திப்பமைப்பார்பெயர்.

அளவர். (௧)

நெய்தற்றலைமகன்பெயர்.

கொண்கன்-துறைவன்-மெல்லன்-புலம்பன்-கடற்சேர்ப்பன். ஆ௫.

மருதநிலமக்கள்பெயர்.

களமர்-தொழுவர்-மள்ளர்-

சூத்திரம்.

கம்பளர், வினைஞருழவர் கடை
ஞர்கிளைஞரொன், றனையவைகழ
னிக்கடைத்தவர்பெயரே.
(௱௪௰) சூ.
உழத்தியர்கடைச்சியராற்று
க்காலாட்டிய, ருழத்தகழனிக்க
டைத்தமகளிர்.
(௱௪௧) சூ.
ஊரன்மகிழ்நன்கிழவனென்
றிவை, சாலிமருதத்தலைவன்பெ
யரே.
(௱௪௨) சூ.
மனைவிகிழத்தி யில்லாளில்
லென், றனையவைமருதத்தலைவி
க்காகும்.
(௱௪௩) சூ.
அனையவைமுல்லைத் தலைவிக்
குமாகும்.
(௱௪௪) சூ.
முன்னை முன்னிளவன்முன்
றோன்றலாகும்.
(௱௪௫) சூ.
பின்னைபின்னிளவல் பின்றோ
ன்றலாகும்.
(௱௪௬) சூ.
* தௌவை முன் பிறந்தாள்
சேட்டையாகும்.
(௱௪௭) சூ.
* தங்கைபின்னையெங்கையா
கும்.
(௱௪௮) சூ.
மருமான்பிறங்கடையும் பல்
வழித்தோன்றல்.

பெயர்ப்பிரிவு.

கம்பளர் - வினைஞர் - உழவர் - க
டைஞர் - கிளைஞர். ஆக ௮.

மருதநிலப்பெண்பெயர்.
உழத்தியர் - கடைச்சியர் -
ஆற்றுக்காலாட்டியர். ஆக ௩.

மருதநிலத்தலைவன்பெயர்.
ஊரன் - மகிழ்நன் - கிழவன்.
ஆக ௩.

மருதநிலத்தலைவிபெயர்.
மனைவி - கிழத்தி - இல்லாள் -
இல். ஆக ௪.

முல்லைத்தலைவிபெயர்.
மருதத்தலைவிக்குரிய பெய
ரெலாமாம்.

முன்றோன்றலின்பெயர்.
முன்னை - முன்னிளவல்.
ஆக ௨.

பின்றோன்றலின்பெயர்.
பின்னை - பின்னிளவல்.
ஆக ௨.

சேட்டையின்பெயர்.
தௌவை - முன்பிறந்தாள்.
ஆக ௨.

தங்கையின்பெயர்.
பின்னை - எங்கை. ஆக ௨.

வழித்தோன்றலின்பெயர்.
மருமான் - பிறங்கடை - உம்
பல். ஆக ௩.





சூத்திரம்.

(௱௪௯) ——
குழவியுமகவுங்குட்டனும்பி
ள்ளையு, மழவுஞ்சேயு மிளமை
க்குவகுத்தனர்.
(௱௫௰) சூ.
மகாருஞ்சிறாருமவர்பன்மை
(௱௫௧) சூ. [வழக்கே.
நண்பன்பாங்கனெலுவன்கி
ளைஞன், றங்கியகேள்வன் றோ
(௱௫௨). சூ. [ழன்பெயரே.
எடாவென்பது தோழன் மு
ன்னிலைப்பெயர்.
(௱௫௩) சூ.
ஓரைபொய்தலிகுளையாயத்
தோழிசேடியிணங்கிபாங்கி.
(௱௫௪) சூ.
எல்லாவுமேடியுந்தோழிமு
ன்னிலைப்பெயர்.
(௱௫௫) சூ.
கணவனுந்தோழனும் புதல்
வனுங்காதலன்.
(௱௫௬) சூ.
மனைவியுந்தோழியும் புதல்
வியுங்காதலி.
(௱௫௭) சூ.
தோழனுங்கணவனுந் துணை
வனென்றாகும்.
(௱௫௮) சூ.
தாரேதண்டமநீகம்வரூதினி,
தானைபதாதிபதாகினியூகம், வா
னியநிகம்பாடிபகுதி, சேனைநி
தானந்திரள்படையென்ப.

பெயர்ப்பிரிவு.

இளம்பிள்ளைகள்பெயர்.
குழவி - மகவு - குட்டன் - பி
ள்ளை - மழவு - சேய். ஆக ௬.

பிள்ளைப்பன்மையின்பெயர்.
மகார் - சிறார். ஆக ௨.

தோழன்பெயர்.
நண்பன் - பாங்கன் - எலுவன் -
கிளைஞன் - கேள்வன். ஆக ௫.
தோழன்முன்னிலையின்பெயர்
எடா. (௧)

பாங்கியின்பெயர்.
ஓரை - பொய்தல் - இகுளை -
ஆயம் - தோழி - சேடி - இணங்
கி. ஆக ௭.
தோழிமுன்னிலையின்பெயர்.
எல்லா - எடி. ஆக ௨.

காதலனென்னும்பெயர்.
கணவன் - தோழன் - புதல்வ
ன் - இம்மூவர்க்குமுரித்து.
காதலியென்னும்பெயர்.
மனைவி - தோழி - புதல்வி -
இம்மூவர்க்குமுரித்து.
துணைவனென்னும்பெயர்.
தோழன் - கணவன் - இவ்விரு
வர்க்குமுரித்து.

படையின்பெயர்.
தார் - தண்டம் - அநீகம் - வ
ரூதினி - தானை - பதாதி - பதாகி
னி - யூகம் - வானி - அநிகம் - பா
டி - பகுதி - சேனை - நிதானம்.
ஆக ௰௪.]

சூத்திரம்.

(௱௫௯) ———
தார்நிரையாக்கந் தூசி கொ
டிப்படை.
(௱௬௰) சூ.
கூழைசூழ்தல்கடைக் கூழை
யாகும்.
(௱௬௧) சூ.
உண்டையுங்கையுமொட்டும்
யூகமும், வந்தவணியும்படைக்
கைவகுத்தனர்.
(௱௬௨) சூ.
மகண்மண்ணவர்மனிதர்ந
ரனென், றெத்தமாக்கண்மானி
டர்பொதுப்பெயர்.
(௱௬௩) சூ.
மாந்தர்மைந்தர்மக்களாண்
பொதுப்பெயர்.
(௱௬௪) சூ.
மன்பதைபைஞ்ஞீன்மக்கட்
பரப்பே.
(௱௬௫) சூ.
ஒரையும்பண்ணையுமாயமுங்
குழுவுங்,கூறுபமாதோமக்கட்
கூட்டம்.
(௱௬௬) சூ.
சட்டகமெய்யே தாவரம்பூ
ட்சி,யங்கங்காயம் புதையுறுப்
பியாக்கை,யாதாரந்தேகமுரு
வம் படிவமென், றோதினர்நூ
லோருடலின்பெயரே.
(௱௬௭) சூ.
அழனேகுணபங்களேபரஞ்
சவம்,பிணமெனவைத்துப்பே
சினர்புலவர்.

பெயர்ப்பிரிவு.

கொடிப்படையின்பெயர்.
தார்-நிரை-ஆக்கம்-தூசி.
ஆ ௪.

கடைக்கூழையின்பெயர்.
கூழை-சூழ்தல். ஆ ௨.

படைவகுப்பின்பெயர்.
உண்டை-கை-ஒட்டு-யூகம்-
அணி. ஆ ௫.

மானிடர்பொதுப்பெயர்.
மக்கள்-மண்ணவர்-மனித
ர்-நரர்-மாக்கள். ஆ ௫.

மக்களாண்பொதுப்பெயர்.
மாந்தர்-மைந்தர். ஆ ௨.

மக்கட்பரப்பின்பெயர்.
மன்பதை-பைஞ்ஞீல்.
ஆ ௨.

மக்கட்கூட்டத்தின்பெயர்.
ஒரை-பண்ணை-ஆயம்-குழு
ஆ ௪.

உடலின்பெயர்.
சட்டகம்-மெய்-தாவரம்-
பூட்சி-அங்கம்-காயம்-புதை-
உறுப்பு-யாக்கை-ஆதாரம்-
தேகம்-உருவம்-படிவம்.
ஆ ௰௩.

பிணத்தின்பெயர்.
அழன்-குணபம்-களேபர
ம்-சவம். ஆ ௪.





சூத்திரம்.

(௱௬௮) ———
யூபங்கவந்தமட்டையுடற்கு
றை.
(௱௬௯) சூ.
சரண்பதங்காலடி கழறாள்
பாதம்.
(௱௭௰) சூ.
பரடே காலடி மிசைத்திரள்
கரடே.
(௱௭௧) சூ.
சங்கங்கணைக்கால்.
(௱௭௨) சூ.
சாநுமுழந்தாள்.
(௱௭௩) சூ.
வாமமூருக்கவான் றொடை
ப்பற்றே.
(௱௭௪) சூ.
ஊருவுங்கவானுஞ் சோகமு
ங்குறங்கே.
(௱௭௫) சூ.
கடிதட நிதம்பம்வடிவ கலல்
குல்.
(௱௭௬) சூ.
நுசுப்புமருங்குனுண்ணிடை
யாகும்.
(௱௭௭) சூ.
ஒக்கலை மருங்குற்பக்கமாகு
[ம்.
(௱௭௮) சூ.
குக்கி துத்தமுதரஞ்சடரமெ
ன், றெத்தமடிவயினகடொன்
றியவயிறே.

பெயர்ப்பிரிவு.

உடற்குறையின்பெயர்.
யூபம்-கவந்தம்-மட்டை.
ஆ ௩.

பாதத்தின்பெயர்.
சரண்-பதம்-கால்-அடி-
கழல்-தாள். ஆ ௬.

கரட்டின்பெயர்.
பரடு. (௧)

கணைக்காலின்பெயர்.
சங்கம். (௧)

முழந்தாளின்பெயர்.
சாநு. (௧)

தொடைப்பற்றின்பெயர்.
வாமம்-ஊரு.கவான் ஆ ௩.

குறங்கின்பெயர்.
ஊரு-கவான்-சோகம்-கு
றங்கு. ஆ ௪.

அல்குலின்பெயர்.
கடிதடம்-நிதம்பம். ஆ ௨.

இடையின்பெயர்.
நுசுப்பு-மருங்குல். ஆ ௨.

மருங்குற்பக்கத்தின்பெயர்.
ஒக்கலை. (௧)

வயிற்றின்பெயர்.
குக்கி-துத்தம்-உதரம்-சட
ரம்-மடி-வயின்-அகடு. ஆ ௭.

சூத்திரம்.

(ாஎகூ) ———

இலிங்கமுங் கோசமுமாண்
குறியாகும்.

(ாஅய) சூ.

யோநியும்பகமும் பெண்கு
றியாகும்.

(ாஅக) சூ.

உந்திபோகிலிலஞ்சி யிதலை
வந்தநாபிகொப்பூழாகும்.

(ாஅஉ) சூ.

அகலமருமம நிறமுரமார்கமா
ர்பே.

(ாஅரு) சூ.

கொங்கைசுவர்க்கங்குய ந்த
நநகிலந்,தங்கியகுருக்க ணம்ம
ம்பயோதர, மிங்கிவை மாதர்
முலையெனவிளம்புவர்.

(ாஅச) சூ.

சூசுகஞ் சிலீமுகமுலைக்கண்
சொல்லும்.

(ாஅரு) சூ.

சுணங்கு தேமல் பொறியுத்
திதிதலை;* நுணங்கு திதனிவசந்
திகை துத்தி.

(ாஅசா) சூ.

அத்தம்பாணி கரந்தோள்
கைத்தலம்.

(ாஅஎ) சூ.

அங்கைகுடங்கையங்கையா
கும்.

பெயர்ப்பிரிவு.

ஆண்குறியின்பெயர்.

இலிங்கம்-கோசம். ஆ உ.

பெண்குறியின்பெயர்.

யோநி-பகம். ஆ உ.

கொப்பூழின்பெயர்.

உந்தி-போகில் - இலஞ்சி-
இதலை-நாபி. ஆ ரு.

மார்பின்பெயர்.

அகலம்-மருமம்-நிறம்-உர
ம்-ஆகம். ஆ ரு.

முலையின்பெயர்.

கொங்கை-சுவர்க்கம்-குயம்-
தநம்-நகில்ம்-குருக்கண்- அம்
மம்-பயோதரம். ஆ அ.

முலைக்கண்ணின்பெயர்.

சூசுகம்-சிலீமுகம். ஆ உ.

தேமலின்பெயர்.

சுணங்கு-பொறி-உத்தி-தித
லை-திதனி-வசந்திகை- துத்தி.
ஆ எ.

கைத்தலத்தின்பெயர்.

அத்தம்-பாணி-கரம்-தோ
ள்-கைத்தலம். ஆ ரு.

அகங்கையின்பெயர்.

அங்கை-குடங்கை. (ஆ உ)

அ

* நுணங்கு- எ- து- தொடைச்சுவைப்பயன்கருதிய அடை
மொழி யென்றறியாது சிலர் மயங்கிப்பரியாய மெனக்
கொண்டனர் மற்றுமவரிவ்வாறுகொள்வன சிலவறிக.



சூத்திரம்.

(ாஅஅ) ———

அங்குலிவிரலாம்.

(ாஅகூ) சூ.

உகிர்நகமாகும்.

(ாகூய) சூ.

புயமுமொய்ம்பும்வாகுவுந்
தோளே.

(ாகூக) சூ.

வெரிநும்வெந்நும்புறனுமு
துகே.

(ாகூஉ) சூ.

சுவலுஞ் செகிலு நிகலமுந்
தோண்மேல்.

(ாகூரு) சூ.

கண்டமுங்கிரீவமுங் களனுமிட
றுங்,கந்தரமைந்துங் கழுத்தெ
னக்கழறுவர்.

(ாகூச) சூ.

கயிலேசிறுபுறமெருத்தஞ்சு
வல்பிடர்.

(ாகூரு) சூ.

பிறமும்பிறக்குமபரமும்பி
றகே.

(ாகூசா) சூ.

வதநமாநநம்வத்திரமுகமே.

(ாகூஎ) சூ.

அதரம்பாலிகையிதழேயோ
ட்ட,முத்தமுதடெனமொழிந்
தனர்புலவர்.

(ாகூஅ) சூ.

தந்தமுமெயிறுந்தட்டமும்
பல்லாம்.

மு

பெயர்ப்பிரிவு.

விரலின்பெயர்.

அங்குலி. (க)

நகத்தின்பெயர்.

உகிர். (க)

தோளின்பெயர்.

புயம்-மொய்ம்பு-வாகு.
ஆ ரு.

முதுகின்பெயர்.

வெரிந்-வெந்-புறன். ஆ ரு.

தோண்மேலின்பெயர்.

சுவல்-செகில்- நிகலம்-
ஆ ரு.

கழுத்தின்பெயர்.

கண்டம்-கிரீவம்-களம்-மிட
று-கந்தரம். ஆ ரு.

பிடரின்பெயர்

கயில்-சிறுபுறம்-எருத்தம்-
சுவல். ஆ ச.

பிறகின்பெயர்.

பிறம்-பிறக்கு-அபரம்.
ஆ ரு.

முகத்தின்பெயர்.

வதநம்-ஆநநம் - வத்திரம்-
ஆ ரு.

உதட்டின்பெயர்.

அதரம்-பாலிகை - இதழ்-
ஒட்டம்-முத்தம். ஆ ரு.

பல்லின்பெயர்.

தந்தம்-எயிறு-தட்டம். ரு.

மு

சூத்திரம்.

(௱௯௯) ———
முறுவலுநகையு மூரலுமெயிறும்.

(௨௱) சூ.
நகுதற்குமவையே நாமமாகும்.

(௨௱௧) சூ.
அணரியண்ணம்.

(௨௱௨) சூ.
அணல்கீழ்வாய்ப்புறம்.

(௨௱௩) சூ.
அண்ணமுண்ணா வாகலுமுரித்தே.

(௨௱௪) சூ.
தாலந்தாலு நாவெனச் சாற்றுவர்.

(௨௱௫) சூ.
துண்டமு நாசியு கிராணமுமூக்கே.

(௨௱௬) சூ.
கபோலங் கவுள நு கொடிறு கதுப்பே.

(௨௱௭) சூ.
நாட்ட நயந நேத்திரம் விலோசந,நோக்கந்தாரை யம்பகம்பார்வை,யக்கம் விழிகோகண்ணாகும்மே.

(௨௱௮) சூ.
மத்தகமிலாடமுண்டக நுதல்குளம்,நெற்றிபாலமென நிகழ்த்தினரே.

(௨௱௯) சூ.
புரூரம்பிருகுடி நுதவேப்புருவம்.]



பெயர்ப்பிரிவு.

மற்றுமெயிற்றின்பெயர்.
முறுவல்-நகை-மூரல். ௩.
(ஆ ௬.

நகுதலின்பெயர்.
முறுவல்-நகை-மூரல். ஆ ௩.

அண்ணத்தின்பெயர்.
அணரி. (௧)

கீழ்வாய்ப்புறத்தின்பெயர்.
அணல். (௧)

உண்ணாவின்பெயர்.
அண்ணம். (௧)

நாவின்பெயர்.
தாலம்-தாலு. ஆ ௨.

மூக்கின்பெயர்
துண்டம்-நாசி-கிராணம். ஆ ௩.

சதுப்பின்பெயர்.
கபோலம்-கவுள்-அநு-கொடிறு. ஆ ௪.

கண்ணின்பெயர்.
நாட்டம்- நயநம்- நேத்திரம்-விலோசநம்-நோக்கம்-தாரை-அம்பகம்- பார்வை-அக்கம்-விழி-கோ. ஆ ௰௧.

நெற்றியின்பெயர்.
மத்தகம்-இலாடம்-முண்டகம்-நுதல்-குளம்-பாலம். ஆ ௬.

புருவத்தின்பெயர்.
புரூரம்-பிருகுடி-நுதல். ஆ ௩.]





சூத்திரம்.

(௨௱௰) ———
கன்னமுஞ் செவியுங்காதின்பெயரே.

(௨௱௰௧) சூ.
சிரமேசென்னியுச் சிமுடிநவிரங், கம்மேயுவ்விசேகரந்தலையாம்.

(௨௱௰௨) சூ.
குஞ்சிநவிருளை குடுமி தொங்கல்,பங்கிபித்தையோரிசிகையென், றிங்கிவை யெல்லா மாண்மயிரென்ப.

(௨௱௰௩) சூ.
கோதைநெடுமை கூந்தலைம்பா,லோதிகூழைபரிசாரங்கதுப்புக், கேசமளகங்குழல குரால சுரியல்,பேசின்மராட்டம் பெண்மயிரென்ப.

(௨௱௰௪) சூ.
கதுப்பேகேசஞ்சுரியன்மைந்தர், மயிர்க்குமொருவழிவருதற்குமுரிய.

(௨௱௰௫) சூ.
ஓரிபங்கியுளையேயுரோமங், கேசமராட்டம்பிறமயிராகும்.

(௨௱௰௬) சூ.
சிரோந்தமு ரோமஞ் செறிமயிர்ப்பரப்பே.

(௨௱௰௭) சூ.
கொந்தளமளகம்விலோதமயிர்க்குழற்சி.



பெயர்ப்பிரிவு.

காதின்பெயர்.
கன்னம்-செவி. ஆ ௨.

தலையின்பெயர்.
சிரம்-சென்னி-உச்சி-முடி-நவிரம்-கம்-உவ்வி - சேகரம். ஆ ௮.

ஆண்மயிரின்பெயர்.
குஞ்சி-நவிர்-உளை-குடுமி-தொங்கல்-பங்கி-பித்தை-ஓரி-சிகை. ஆ ௯.

பெண்மயிரின்பெயர்.
கோதை-நெடுமை-கூந்தல்-ஐம்பால்-ஓதி-கூழை- பரிசாரம்-கதுப்பு-கேசம்- அளகம்-குழல்-குரால்-சுரியல்-மராட்டம். ஆ ௰௪.

மைந்தர்மயிரின்பெயர்.
கதுப்பு-கேசம்-சுரியல். ஆ ௩.

பிறமயிரின்பெயர்.
ஓரி-பங்கி-உளை- உரோமம்-கேசம்-மராட்டம். ஆ ௬.

மயிர்ப்பரப்பின்பெயர்.
சிரோந்தம்-உரோமம். ஆ ௨.

மயிர்க்குழற்சியின்பெயர்.
கொந்தளம்-அளகம்-விலோதம். ஆ ௩.

சூத்திரம்.

(௨௱௰௮) ——

பின்னகம் பந்த முடி முச்சி
கொண்டை,மன்னுசிகழிகைகு
ழல்சுடிகைமௌலி,யின்னவை
மயிர்முடியாகுமென்ப.

(௨௱௰௯) சூ.

பின்னல் சடிலங் கோடீரம்
வேணி, மன்னு மயிர்ச் சடை
யெனவகுத்தனரே.

(௨௨௰) சூ.

அவயவங்காத்திரமங்கமுற
ப்பே, சினையென்றுரைத் தனு
மொருவழிச்சிவணும்.

(௨௨௧) சூ.

கந்துங்கொளுத்துங்கழுத்தி
ஞ்சந்தாம்.

(௨௨௨) சூ.

மெய்த்தகு மிறையே பிறங்
கெனப்படுமே.

(௨௨௩) சூ.

செதுகையங்கிதஞ்செறியுட
றறும்பே.

(௨௨௪) சூ.

ஆலேகழலையாகுமென்ப.

(௨௨௫) சூ.

நாடியுஞ்சிரையுநரம்பினுமை

(௨௨௬) சூ.

என்பத்தியங்க மெலும்பா
கும்மே.

(௨௨௭) சூ.

வெண்டலை யோடெகபால
மாகும்.

பெயர்ப்பிரிவு.

மயிர்முடியின்பெயர்.

பின்னகம் - பந்தம் - முடி -
முச்சி - கொண்டை - சிகழிகை -
குழல் - சுடிகை - மௌலி.
ஆ. ௯.

சடையின்பெயர்.

பின்னல் - சடிலம் - கோடீர
ம் - வேணி. ஆ. ௪.

உறுப்பின்பெயர்.

அவயவம் - காத்திரம் - அங்கம் -
சினை. ஆ. ௪.

சந்தின்பெயர்.

கந்து - கொளுத்து - கழுத்து.
ஆ. ௩.

இறையின்பெயர்.

பிறங்கு. (௧)

உட்டறும்பின்பெயர்.

செதுகை - அங்கிதம். ஆ. ௨.

கழலையின்பெயர்.

ஆலே. (௧)

நரம்பின்பெயர்.

நாடி - சிரை. ஆ. ௨.

எலும்பின்பெயர்.

என்பு - அத்தி - அங்கம்.
ஆ. ௩.

தலையோட்டின்பெயர்.

கபாலம். (௧)





சூத்திரம்.

(௨௨௮) ——

கழியுடன்முழுவென்புகங்கா
ளமாகும்.

(௨௨௯) சூ.

சிமையஞ்சிகைசிமிலிசிக்கங்
குடுமி.

(௨௩௰) சூ.

நவிரஞ்சுடிகைகுழியுச்சிநா
மம்.

(௨௩௧) சூ.

கரணம்பொறிவாயில் கந்த
மிந்திரியம்.

(௨௩௨) சூ.

சுவையொளியூறோசை நாற்
றமறியுங்,கருவிநாக்கண்மெய்
செவிமூக்கே.

(௨௩௩) சூ.

சீவனுயிராதன்சேதநன்புற்
கல, னணுப்பசுவியமாநனான்
மா.

பெயர்ப்பிரிவு.

கழியுடன்முழுவெலும்பின்
பெயர்.

கங்காளம். (௧)

குடுமியின்பெயர்.

சிமையம் - சிகை - சிமிலி - சி
க்கம். ஆ. ௪.

உச்சியின்பெயர்.

நவிரம் - சுடிகை - குழி. ஆ. ௩.

இந்திரியத்தின்பெயர்.

கரணம் - பொறி - வாயில் - க
ந்தம். ஆ. ௪.

சுவைஒளிஊறு ஓசைநாற்ற
மாகியவைம்புலங்களையறியுங்க
ருவிகளாவன.

முறையே - நா - கண் - மெய் -
செவி - மூக்கு. ஆ. ௫.

சீவன்பெயர்.

உயிர் - ஆதன் - சேதநன் - புற்
கலன் - அணு - பசு - இயமாந
ன் - ஆன்மா. ஆ. ௮.

கற்றநாவினன்கேட்ட செவியினன், முற்றவுணர்ந்தமு
தறிவாள்,ஞாகரிசநாட்டத்தாரியனருவந்தைத்,தேருங்கா
ட்சிச்சேந்தன்றிவாகரத், திரண்டாவது மக்கட்பெயர்த்
தொகுதிமுற்றிற்று.